செய்தி வெளியீட்டு எண் : 67

# அரசு செய்தி வெளியீடு – 22-01-2010

மலேசிய நாட்டின் பிரதமர் டத்தோஸ்ரீ முகமது நஜீப் துன் ரஜாக் அவர்களையும், அவருடன் வந்துள்ள மலேசிய அமைச்சர்கள், முதல் அமைச்சர்கள் ஆகியோரையும் இன்று மாலையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களும், துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர். தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, ஐ.ஏ.எஸ்., நிதித் துறை செயலாளர், தொழில் துறை செயலாளர் மற்றும் பொதுத் துறை செயலாளர் ஆகியோரும் உடன் இருந்தனர்.

முதலமைச்சர் கலைஞர் கலந்துரையாடலின் போது குறிப்பிட்ட தாவது :-

"மலேசிய பிரதமர் அவர்கள் அங்குள்ள அனைத்து இனத்தைச் சார்ந்தவர்களையும் குறிப்பாக இந்திய வம்சாவளியினரையும் சமமாகப் பாவித்து அவர்களுக்குரிய நல்வாய்ப்புகளை வழங்குவதற்காக எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளையும் பாராட்டுகிறேன். இந்த நடவடிக்கைகள் மலேசியாவிலே உள்ள இந்திய வம்சாவளியினர்களுக்கும் மற்ற இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் இடையே உள்ள நல்லுறவை மேலும் வலுப்படுத்தும்.

1999ஆம் ஆண்டு மலேசியாவின் பிரதமராக மாண்புமிகு மகாதீர் முகமது அவர்கள் இருந்த போது நான் மலேசியாவிற்கு வந்துள்ளேன். இரண்டு நாடுகளுக்கும் பயனுள்ள பல்வேறு கருத்துகளை அவருடன் அப்போது பகிர்ந்து கொண்டோம். தங்களுடைய இந்தப் பயணமும் இரண்டு நாடுகளுக்கிடையே உள்ள உறவினை மேலும் வலுப்படுத்தும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஜூன் திங்கள் 23 முதல் 27ஆம் தேதி வரை கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டினை நடத்துவதற்கான ஏற்பாட்டினை செய்து வருகிறோம். முதல் உலகத் தமிழ் மாநாடு மலேசியாவில் நடைபெற்றது. தமிழ் மொழி தொன்மையான பேச்சு வழக்கத்திலே உள்ள மொழி. மத்திய அரசு தற்போது இதற்கு செம்மொழி தகுதியினை வழங்கியுள்ளது. உலகம் முழுவதும் உள்ள தமிழ்ச் சான்றோர்கள் பலர் இந்த மாநாட்டிலே கலந்து கொள்ள ஆர்வமாக இருப்பதோடு - ஆய்வுக் கட்டுரைகளை வழங்கவும் முன் வந்துள்ளார்கள். முதல் உலகத் தமிழ் மாநாட்டினை நடத்திய மலேசிய நாட்டிலிருந்து தங்கள் தலைமையில் ஒரு குழு இந்த மாநாட்டிலே கலந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

தெற்காசிய பகுதியில் மருத்துவத் துறையிலே அனைத்து வசதிகளையும் கொண்டதாக தமிழ்நாடு விளங்குகின்றது. உலகத் தரத்தில் சிகிச்சை அளிக்கக் கூடிய மிகச் சிறந்த மருத்துவமனைகள் இங்கே உள்ளன. மேலும் சுற்றுலா பயணிகளைக் கவரக் கூடிய முக்கியமான இடமாகவும் தமிழ்நாடு இருப்பதால் உலக முழுவதுமிலிருந்து சிகிச்சைக்காகவும், ஓய்வுக்காகவும் வெளி நாட்டினர் அடிக்கடி வந்து செல்கிறார்கள். எனவே தமிழகத்திலே உள்ள மருத்துவ வசதிகளை மலேசிய நாட்டினரும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறிக் கொள்கிறேன்.

சிறந்த உயர் கல்வியை வழங்கக் கூடிய கட்டமைப்பினைக் கொண்டுள்ளதாக தமிழ்நாடு தற்போது திகழ்கிறது. குறிப்பாக தொழிற் கல்வி பயில ஏற்ற இடமாக தமிழகம் விளங்குகின்றது. இந்த அருமையான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அண்ணா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் போன்ற உயர் கல்வி அமைப்புகளோடு மலேசிய நாட்டுப் பல்கலைக் கழகங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள முன் வர வேண்டும்.

உலக அளவில் பொருளாதார மந்த நிலை இருந்த போதிலும், தமிழகம் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. கடந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டும் 37 நிறுவனங்கள் சுமார் 46 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தொழிலகங்களை தமிழகத்திலே நிறுவ முன் வந்துள்ளன. இந்தத் திட்டங்களுக்கான சிறப்பு சலுகைகள் தமிழக அரசால் வழங்கப்படுகிறது. வேலை வாய்ப்புகளை அளிக்கக் கூடிய தொழிற்சாலைகளுக்கு தனிச் சலுகைகளும் அரசினால் வழங்கப்படுகின்றன. மலேசியாவிலே உள்ள தொழிலதிபர்களும் முதலீட்டாளர்களும் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். மேலும் தமிழக அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு கட்டமைப்புப் பணிகளில் மலேசிய நிறுவனங்களும் பங்கேற்கலாம்"

இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் எடுத்துக் கூறினார்.

மலேசிய பிரதமர் தன்னுடன் அழைத்து வந்திருந்த அமைச்சர் களையும், முதலமைச்சர்களையும் முதல்வருக்கு அறிமுகப்படுத்தி வைத்த தோடு, மலேசியாவில் உள்ள இந்தியர்களுக்கு உதவி செய்வதற்காகவே தன்னுடைய தலைமையில் அமைச்சர்களைக் கொண்டு குழு ஒன்று அமைத்திருப்பதாகவும், தமிழகத்திற்கு வெளியே மிக அதிகமாக தமிழ்ப் பள்ளிகள் மலேசியா நாட்டிலே தான் இருப்பதாகவும், அந்தப் பள்ளிகளுக்கு அதிக நிதியினை அரசின் சார்பில் ஒதுக்குவதாகவும், உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்கு முதலமைச்சர் அவர்களின் அழைப்பினையேற்று மலேசிய அரசின் சார்பில் அதிக எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் அடங்கிய குழுவினை அனுப்புவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-